செ.வெ.எண்:51/மே நாள்:28.05.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

**தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன அரசு இ-சேவை மையம் மாணவ, மாணவிகள் பல்வேறு சான்றிதழ்களைப் பெற ஏதுவாக விடுமுறை தினமான 29.05.2016 (நாளை) முழுநேரமும் செயல்படும்.**

**மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தமிழகம் முழுவதும் அரசு இ-சேவை மையங்களை அமைத்து நிர்வகித்து வருகிறது. இம்மையங்கள் காலை 9.45 மணி முதல் மாலை 5.45 மணி வரை செயல்படும். பொதுமக்கள் இம்மையங்களுக்குச் சென்று அரசின் சேவைகளைப் பெறலாம்.

பள்ளித்தேர்வுகளின் முடிவுகள் வெளிவந்துள்ள நிலையில் மாணவ, மாணவிகள் பல்வேறு சான்றிதழ்களைப் பெறுவதற்காக அதிக அளவில் விண்ணப்பம் செய்து வருகின்றனர். எனவே, பொதுமக்களின் நலன் கருதி நாளை 29.05.2016 ஞாயிற்றுக்கிழமை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களில் இயங்கும் அரசு இ-சேவை மைங்கள் வழக்கம்போல் செயல்படும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே பொதுமக்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.